**Subject Code RMLNS2:5**

விருப்பப்பாடம் 5 - **கோயிற்கலை**

நோக்கம்: சமயம் என்பது தான் தோன்றிய சூழலுக்குத்தக மக்களை வழிகாட்டும் ஒளி விளக்காகும். இந்து சமயம் என்பது ஒரு மதம் அல்ல். அது வாழும் வழி. அவ்வழிகளுள் ஒன்று பக்திநெறி. பக்திநெறியில் முக்கிய அங்கம் வகிப்பது கோயில்கள். இறைத்திரு உருவங்கள், சிற்பங்கள், ஓவியங்கள், நிறைந்த கோயில்கள் மனத்தினை ஒருமுகப்படுத்திப் பக்தி நெறிக்குச் செலுத்தும் சிறந்த கருவிகளாய் விளங்குகின்றன. இக்கோயில்கள் காலந்தோறும், மன்னர்கள், வள்ளல்கள், ஆன்மீகவாதிகள், பக்தர்கள் போன்றோரின் முயற்சியால் வளர்ந்து வந்த நிலையினையும், அதன் அமைப்பு முறையினையும் பற்றி, இப்பாடங்கள் ஐந்து அலகுகளாகப் பிரித்து விளக்குகின்றன.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் இயங்கும் கோயில்களில் நிர்வாக அலுவலர்களாகப் (நு.மு) பதவி பெறுவதற்கு உரிய தேர்வு எழுதும் வகையிலும் இப்பாடம் அமைக்கப் பெற்றுள்ளது

அலகு – 1

கோயில் வகைகள் - கோயில் இலக்கணம் - இடந்தேர்ந்தெடுத்தல் - கோபுரங்களின் அமைப்பு – கோயில் மண்டபங்கள் - தூண்களின் அமைப்பு வரலாறு.

அலகு – 2

சங்க காலக் கோயில்கள் (பத்துப்பாட்டு, எட்டுத்தொகை) – சங்கம் மருவிய காலக் கோயில்கள் - (சிலப்பதிகாரம், மணிமேகலை, நூல்களில் உள்ளவை) - பல்லவர் காலக் கோயில்கள் - குடை வரைக் கோயில்கள் - ஒற்றைக் கற்கோயில்கள் - கட்டிடக் கோயில்கள் - சோழர் காலக் கோயில்கள் - விஜயாலயசோழன் - ஆதித்த சோழன் - முதல் பராந்தகன் - உத்தம சோழன் - முதலாம் இராசராசசோழன் - முதலாம் இராசேந்திரசோழன் - இராண்டாம் இராசராசன்- மூன்றாம் குலோத்துங்கன் - பிற்காலப் பாண்டியர்கள் கோயில்கள் - விஜய நகர நாயக்க மன்னர்கள் காலக் கோயில்கள்.

அலகு – 3

கோயில் தொடர்பான கலைகள் - சிற்பக்கலை – பல்லவர், சோழர், பாண்டியர், நாயக்கர் காலச் சிற்பங்கள் - செப்புத் திருமேனிகள் - நடராசர் உருவமும் தத்துவமும், மேலையூர் மைத்திரேயர், நாகைப்பட்டினத்துப்புத்தர், பெருந்தோட்டத்துத் திருமால், சிங்காநல்லூர் உலகளந்த பெருமாள், திருவாலங்காட்டுச் சோமாஸ்கந்தர், பல்லவனீச்சரத்துச் சேயுடைச்செல்வி, திருக்காறைவாசல் பிட்சாடனர் - திருமால் வடிவங்கள் - நாயன்மார் உருவங்கள் பல்லவர் கால ஓவியங்கள் - பனைமலை, காஞ்சி – கயிலாசநாதர், திருமலைப்புரத்து ஓவியம் - சித்தன்ன வாசல் ஓவியம் - சோழர் கால ஓவியம் - விஜயநகரமன்னர்கள் கால ஓவியம் - கோயில்களில் வளர்ந்த நாட்டியம் - நாடகம் - இசை - இலக்கியம் - பற்றிய செய்திகள்

அலகு – 4

சிறப்பாகப் பயில வேண்டிய திருவுருவங்கள் - விநாயகர், முருகன் - பலவித அமைப்பு, தட்சிணாமூர்த்தி, அர்த்தநாரீசுவரர், சந்திரசேகரர், பிட்சாடனர், ஆடல்வல்லான், காலாரி, காமதகனர், இலிங்கோற்ப்பவர் - திருமால் பத்து அவதார மூர்த்தங்கள் - நின்ற, இருந்த, கிடந்த நிலை மூர்த்திகள்

அலகு – 5

சிறப்பாகப் பயில வேண்டிய கோயில்கள் - தில்லை, திருவரங்கம், தஞ்சை, தாராசுரம், கங்கை கொண்ட சோழபுரம், காஞ்சி, திருவாரூர், மதுரை, திருச்செந்தூர்

பார்வை நூல்கள்


1. தமிழகக் கோயிற்கலைகள் - தொல்பொருள் துறை வெளியீடு - இரா. நாகசாமி, மா. சந்திரமூர்த்தி
2. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், மகேந்திர வர்மன், நரசிம்ம வர்மன் - மயிலை சீனி வேங்கடசாமி.
3. சிற்பமும் கலைவாழ்வும் - ஜே.எம். சோமசுந்தரம்
4. ஆலயங்களின் உட்பொருள் விளக்கம் - இலஞ்சி ஏ. சொக்கலிங்கம்
5. முற்காலச் சோழர்கலையும் சிற்பமும் - எஸ். ஆர். பாலசுப்ரமணியம்
6. பல்லவர் வரலாறு – டாக்டா மா. இராசமாணிக்கம்
7. சோழர் வரலாறு – தி.வை. சதாசிவப் பண்டாரத்தார்
8. நாயக்கர் வரலாறு – அ.கி பரந்தாமனார்
9. தமிழக சிறப்பு ஓவியக் கலைகள் - டாகடர் ஏகாம்பரநாதர்
10. தமிழகக் கோயில்கள் - டாக்டர் இரா. நாகசாமி
11. தெய்வத் திருவுருவங்கள் - புலவர் ந. முருகவேள்
12. தென்னிந்தியச் சிற்ப வடிவங்கள் - க. நவரத்தினம்
13. கோயிற்கலையும் சிற்பங்களும் - கலைஞன் பதிப்பகம், சென்னை – கே. ஆர் சீனிவாசன்

1. சிவாலய அமைப்பும் சிவ வழிபாட்டு முறையும் - கைலாசநாதர் குருக்கள்
2. தில்லைத் திருக்கோயில், மதுரை மீனாட்சி, திருச்செந்தூர் முருகன் - மணிவாசகர் பதிப்பகம் - டாக்டர் ச. மெய்யப்பன்
3. கணபதி, முருகன், ஆடவல்லான் - திருவாவடுதுறை ஆதீனம் - மகா வித்துவான் ச. தண்டபாணி தேசிகர்
4. இந்து மத இணைப்பு விளக்கம் - கே. ஆறுமுக நாவலர்
5. வைணவ சமயம் ஓர் அறிமுகம் - தமிழ்ப்புத்தகாலயம் - ப. அருணாசலம்
6. இந்தியக் கலைச் செல்வம் - தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்
7. கோயிற் களஞ்சியம் அறிமுகம் - தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - கோ.மு. முத்துச்சாமி பிள்ளை.